# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 119/2019** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திரு. அந்தோனி சபரி முத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 17.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 17 July 2026**.**

A2 எதிரி ஆஜர். A1 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது தற்போது தமிழ்நாடு காவல் துறையில் பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த இரஜேந்திரன் கையொப்பம் நன்கு தெரியும். அவர்களில் ராஜேந்திரன் என்பவர் இறந்துவிட்டதால், வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.12.2016–ம் தேதி 21.00 மணிக்கு தலைமைகாவலர் ராஜேந்திரன் நிலையப்பொறுப்பில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்தது

கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று உள்நோயளியாக சிகிச்சையில் இருந்த கீழக்கோட்டை கண்ணன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.166/2016 இ.த.ச.பிரிவுகள் 294(பி), 342, 324, 506(2)–ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் மாரியப்பன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, அன்றையதினமே 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் இன்பக்கனி மற்றும் சுதாகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் கண்ணன், கனகம்மாள், மாடசாமி, சுதாகர், இன்பகனி, மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த தலைமை காவலர் ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். பின்பு மேல்விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்தார். மேற்படி சாட்சிகள் மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறிய அதே தகவலை என்னிடம் கூறியதால் அவர்களிடம் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு நான் 16.02.2017 அன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்று காயம்பட்ட கண்ணன் என்பருக்கு சிகிக்சை அளித்த சங்கரன்கோவில் அரசுமருத்துவமனை மருத்துவர் மாரிராஜ் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். அந்த காயம் சாதாரண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினார். ஏற்கனவே முதல் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் மாரியப்பன் என்பவரை விசாரணை செய்து பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்றுள்ளார்கள். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 14.02.2017–ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச .பிரிவுகள் 294(பி), 342, 324, 506(2)–ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா1 க்கும் எதிரகளுக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சணை இருந்து வந்தது என் விசாரணையில் துலங்கும் என்றால் சரிதான். மேற்படி சம்பவயிடம் காவல் நிலையத்தில் இருந்து தெற்கு திசையில் சுமார் 1.5 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 க்கு ஏற்பட்ட சம்பவம் மதியம் சுமார் 1.30 மணிக்கு நடந்ததாக என் விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும். அ.சா.1–யை எதிரி சதிஷ் என்பவர் கத்தியை வைத்து இடது கால், இடது கை, வலது கால், வலது மணிக்கட்டு, முதுகின் பின்புறத்தில் அடித்தாதக என் விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும். அ.சா.1 இருசக்கர வாகனத்தில் வரும்போது எதிரி வழிமறித்தாக சொல்லப்படும் நேரித்தில் அ.சா.1 எந்த இருசக்கர வாகனத்தில் வந்தார் மற்றும் பதிவெண் பற்றி என்னுடைய விசாரணை அறிக்கையில் துலங்குமா என்றால் துலங்காது. எதிரிகள் காரில் வந்ததாக சொல்லப்படும் கார் வழக்கில் கைப்பற்றப்பட்டாதா என்றால் இல்லை. அ.சா.1–யை இருநபர்கள் மருத்துவமனைக்கு கூட்டி சென்றார்கள் அந்த நபர்கள் யார் என்று எனது விசாணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1–யை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லப்படும் ஆட்டோ, ஆட்டோ ஓட்டுனர் மற்றும் பதிவு எண் என் விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1 தாக்கியதாக சொல்லப்படும் கத்தியை இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் எனது விசாரணையில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த இராஜேந்திரன் என்பவரை விசாரணை செய்தாதக சொல்லப்படுவது உண்மை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தமாரியப்பன் என்பவரை விசாரணை செய்ததாக

சொல்லப்படுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. அ.சா.1—க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் அமைந்துள்ள இடத்தின் உரிமையாளர் ஈஸ்வரன், துரைராஜ், சண்முகையா என்பவரை வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ஏற்பட் காயம் இந்த எதிரிகளால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் கண்ட ஆவணங்களின் அடிப்படையில் வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்ததாக சொல்லப்படுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லக்கூடிய நாள் நேரத்தில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், மருத்துவரிடம் காயச்சான்றிதழ் பெறவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.